# யூ.சி.எஸ்.ஐ. பற்றி...

*யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகம் ஆசியாவில் துரித வளர்ச்சி கண்டு வரும் ஒரு பல்கலைக்கழகமாகும் என்பதோடு மலேசியாவில் தலைசிறந்த தனியார் பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். 2018ஆம் ஆண்டுக்கான QS உலகளாவிய நிலையிலுள்ள பல்கலைக்கழக அளவில் சிறந்த 100 பல்கலைக்கழகங்களில் ஒன்றாகவும் யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகம் தேர்வு பெற்றுள்ளது.*



2018ஆம் ஆண்டுக்கான QS உலகளாவிய பல்கலைக்கழக அளவிலும் ஆசியாவில் 1.8 விழுக்காடு வளர்ச்சி கண்டுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் 212ஆவது இடத்தில் உள்ளது. 2018ஆம் ஆண்டில் 2017ஆம் ஆண்டைவிட 131 படி உயர்ந்துள்ளது. மலேசியாவில் யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகம் 2017ஆம் ஆண்டில் செத்தாராவில் 15 ஆண்டுகளுக்கும் குறைவான பழைமை வாய்ந்த பல்கலைக்கழகங் களில் வளர்ந்து வரும் 5ஆவது வரிசையில் உள்ளதோடு மலேசியாவில் அதன் வெளிநாட்டுக் கிளைகளும் உள்ளன.

அறிவுசார்ந்த நிலையில் யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆண்டுதோறும் சிறந்த மாணவர்களாக ஹார்வார்டு, லண்டனின் இம்பீரியல் கல்லூரி, சிக்காகோ - திசிங்சுவா பல்கலைக்கழகம் உட்பட மேலும் பல உயர்கல்வி நிலையங்களால் தேர்வு செய்யப்படுவர். அதன் முன்னாள் மாணவர் சங்கமும் துரித வளர்ச்சி கண்டுள்ளது. தொழில்முனைவர்கள், சமூகத் தலைவர்கள், கலைஞர்கள், படைப்பாளர்கள் என 30க்கும் மேற்பட்டோரை அதன் பட்டியலில் சேர்த்துள்ளது. 110 நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகத்தில் படித்து பண்பாட்டையும் பன்முகத்தன்மையையும் வளர்த்து வருகின்றனர்.

யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகம் கோலாலம்பூர், திரெங்கானு, சரவாக்கில் மூன்று கிளைகளைக் கொண்டுள்ளது. அது மருத்துவம், மருந்தகம், பொறியியல், உயிர் அறிவியல், வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம், கட்டடக்கலைஞர், இசை, கலை - ஓவியம், சமூக அறிவியல், தாராளவாத கலை, சமையல், சுற்றுலா உட்பட 100க்கும் மேற்பட்ட துறைகளில் பிரபலம் பெற்றுள்ளது.

ஆசியா அளவில் மிகத் துரிதமாக வளர்ந்து வரும் மலேசியப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக விளங்குகின்றது யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகம்.

2018ஆம் ஆண்டு கியூ.எஸ். உலக நிலைப் பல்கலைக்கழக ஆய்வில் இப்பல்கலைக்கழகம் படைப்புக் கலைத் துறையில் 100ஆவது இடம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதோடு. பொதுவான கணக்கெடுப்பில் 212ஆவது பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசியாவிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் 1.8 விழுக்காட்டு நிலையிலான பல்கலைக்கழகங்கள் மட்டுமே இந்த கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படுகின்றன.

கடந்த 2017ஆம் ஆண்டு 131ஆவது இடத்தில் இருந்த இப்பல்கலைக்கழகம் இவ்வாண்டு 212ஆவது இடத்தில் உள்ளது.

## ஏன் யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயிலவேண்டும்

1. ஆண்டுதோறும் ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் உயர்நிலை அறிவியல் கல்வி பயிலும் ஓராண்டு பாடத் திட்டத்தில் பங்கு பெற முடியும். அங்கு யூ.சி.எஸ்.ஐ. மாணவர்கள் ஆற்றல்மிகு பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் கீழ் பாடம் பயில்வர்.

2.யூ.சி.எஸ்.ஐ. மருத்துவப் பட்டப் படிப்பு உலகளவில் அங்கீகரிக்கப்பட்டது. உதாரணமாக நமது மாணவர்கள் மெல்பர்ன் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயில முடியும். ஓராண்டுப் பட்டப் படிப்பாக இது அமையும். இவை அனைத்தும் மருத்துவப் படிப்புக்கான ஐந்தாண்டுப் பாடத் திட்டத்திற்குள்ளேயே முடித்துவிட முடியும்.

3. யூ.சி.எஸ்.ஐ. மாணவர்கள், ராயல் காலேஜ் ஆப் எடின்பர்க் மருத்துவப் பல்கலைக்கழகத்திலிருந்து பேராசிரியர்களுடன் நேரடி கலந்துரையாடல் செய்ய முடியும். அதோடு, ஹாலந்தில் இருக்கும் மூன்றாவது சிறந்த மருத்துவப் பல்கலைக்கழகமான கோரிங்கெனன் பல்கலைக்கழகத்தில் மாஸ்டர் படிப்பு மேற்கொள்ள முடியும்.

4. கூடிய விரைவில் நெகிரி செம்பிலான் ஸ்பிரிங்ஹில் பகுதியில் யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகம் தனது சொந்த யூ.சி.எஸ்.ஐ. மருத்துவமனையை தொடங்கவுள்ளது. அங்கு மாணவர்கள் அதிகமான அனுபவப் பயிற்சியைப் பெற முடியும்.

5. யூ.சி.எஸ்.ஐ. மாணவர்கள் நாட்டின் முன்னணி அரசு மருத்துவமனைகளில் பயிற்சி பெற முடியும்.

## மருத்துவத் துறையில் வெற்றி பெற்ற இந்திய மாணவர்

கெடாவைச் சேர்ந்த தலிதா நாயுடுவின் பெற்றோர் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள். அவர்கள் தங்களது வாழ்நாள் சேமிப்பை மகளின் மருத்துவப் படிப்புக்காக செலவிட்டனர். அவர்களது தியாகத்திற்கு உரிய அங்கீகாரம் கிடைத்தது. தலிதா யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகத்தின் பிரசிடெண்ட் விருதைப் பெற்றார். முதல்நிலையில் மருத்துவப் பட்டம் பெற்றார். அவரது ஐந்தாண்டு கால யூ.சி.எஸ்.ஐ. வாழ்க்கையில் பட்டப் படிப்பையும் சமூக வாழ்க்கை முறையையும் அவர் கற்றுக் கொண்டார்.

திரெங்கானு மருத்துவமனையில் பயிற்சி பெற்ற அவர், அங்கு சேவையாற்றுவதற்கு பல்வேறு வாய்ப்புகளைப் பெற்றார். அவரது பயிற்சி காலத்தில் நல்லதொரு மருத்துவராக மட்டும் அல்லாமல் சேவை மனப்பான்மை கொண்ட சிறந்த மனிதராகத் திகழ்ந்தார்.

## ஏன் யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகத்தில் பொறியியல் பயிலவேண்டும்

1. ஆண்டுதோறும் இங்கிலாந்தின் மூன்றாவது சிறந்த இன்பிரியல் காலேஜ் லண்டன் பல்கலைக்கழகத்தில் கோடைக்கால ஆய்வுத் திட்டத்தில் பங்கேற்க முடியும். தற்பொழுது யூ.சி.எஸ்.ஐ. மாணவர்கள் நானோ பிரக்டிஸ். புரோட்டின் கிராசிலேஷன் துறையில் வேலை செய்துள்ளனர்.

2. யூ.சி.எஸ்.ஐ. பொறியியல் பட்டப் படிப்பு மாணவர்கள், சீனாவின் இரண்டு சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான சீ சிங் குவா பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் பயிற்சித் திட்டத்தில் பங்கு பெற வாய்ப்புப் பெறுவர்.

3. யூ.சி.எஸ்.ஐ. பொறியியல் மாணவர்கள் மலேசியாவிலும் வெளிநாட்டிலும் நடைபெறுகின்ற பல போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர். அனைத்துலக அளவில் நடைபெற்ற மின்கார் போட்டியில் வெற்றி பெற்றுள்ளனர் என்பதனை பெருமையோடு குறிப்பிட முடியும்.

4. யூ.சி.எஸ்.ஐ. பொறியியல், தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் அமைப்பு முறை ஆகியவை சார்ந்த பணியாளர்களுடன் நெருக்கமான உறவை வளர்த்துள்ளனர். இது மாணவர்களுக்கு மிக எளிதில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது. யூ.சி.எஸ்.ஐ. பொறியியல் மாணவர்கள் முன்னணி நிறுவனங்களான சுகலம்பெர்க், ஷெல், பெட்ரோனாஸ் உட்பட பல நிறுவனங்களில் பணியில் சேர்ந்துள்ளனர்.

## பொறியியல் துறையில் வெற்றி பெற்ற இந்திய மாணவர்கள்

சத்தியராஜ் முனியாண்டி, பிரபு குணசேகரன் ஆகியோர் ரசாயன பொறியியல், இயந்திரவியல் பொறியியல் துறையில் யூ.சி.எஸ்.ஐ. படித்தவர்கள்.

சுலம்பெர்க் ஓஷன் பிளாக்இன் போட்டியில் கலந்து கொண்டு 15ஆயிரம் வெள்ளி ரொக்கப் பரிசையும் பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

சத்தியராஜ் முனியாண்டி தற்போது அந்நிறுவனத்தில் பணியாற்றுகிறார். பிரபு குணசேகரன் பிரசித்தி பெற்ற தீயணைப்பு நிறுவனத்தின் திட்டமிடு நிர்வாகியாகப் பணியாற்றுகிறார்.

## உபகாரச் சம்பளம்

யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ப நிதி உதவியைப் பெற்று வருகிறார்கள். இனமொழிக்கு அப்பால் ஆற்றலை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

தொடக்கக் கட்ட படிப்பு, பட்டப் படிப்பு, மாஸ்டர் படிப்பு என எல்லா நிலையிலும் உள்ள மாணவர்களுக்காக 1986ஆம் ஆண்டு முதல் 100 மில்லியன் வெள்ளி உபகாரச் சம்பளமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதோடு, 2018ஆம் ஆண்டு முதல் மருத்துவம், மருந்தியல் நிதி தொடங்கப்பட்டுள்ளது. இத்துறையில் பதிவு செய்யும் மாணவர்கள் 50 விழுக்காடு கட்டணக் கழிவு பெறுவர். அதோடு 1.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு இத்துறையில் பயில்பவர்க ளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யூ.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழக உபகாரச் சம்பளம் குறித்து ஏப்ரல் 21, 22ஆம் தேதிகளில் நடைபெறும் யூ.சி.எஸ்.ஐ. உபகாரச் சம்பளத் தினத்தில் கலந்து கொண்டு விவரங்கள் அறியலாம்.